செய்தி வெளியீடு எண்:197 நாள்: 11.04.2017

12.04.2017 அன்று நடைபெற இருந்த சென்னை, ஆர்.கே.நகர் இடைத்தேர்தலை முன்னிட்டு, தொகுதிக்குட்பட்ட அனைத்து தொழிலாளர்களும் வாக்களிக்க ஏதுவாக, 1951ம் வருட மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் பிரிவு 135Bன் அடிப்படையில் தேர்தல் ஆணையம் அளித்துள்ள அறிவுரைகளின்படி, சென்னையில் உள்ள தொழில் நிறுவனங்கள், கடைகள் மற்றும் வர்த்தக நிறுவனங்கள் (தகவல் தொழில் நுட்ப நிறுவனங்கள் உட்பட), உணவு நிறுவனங்கள், பீடி மற்றும் சுருட்டு நிறுவனங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் வாக்காளர் பட்டியலின்படியான அனைத்து தொழிலாளர்களுக்கும் (தினக்கூலி / தற்காலிக / ஒப்பந்த பணியாளர்கள் உட்பட ) தேர்தல் நாளான 12.04.2017 (புதன்கிழமை) அன்று அவர்கள் வாக்களிக்க ஏதுவாக ஊதியத்துடன் கூடிய ஒருநாள் விடுப்பு வழங்கப்படவேண்டும் என அனைத்து வேலையளிப்பவர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள் என, தொழிலாளர் ஆணையர் திரு. கா. பாலச்சந்திரன், இ.ஆ.ப., அவர்கள் ஏற்கெனவே அறிவிப்பு வெளியிட்டிருந்தார்கள்.

தற்போது 12.04.2017 அன்று நடைபெற இருந்த இடைதேர்தல் ரத்து செய்யப்பட்டுள்ளதால், நாளை (12.04.2017) அனைத்துவகையான தொழிலாளர்களுக்கும் அறிவிக்கப்பட்டிருந்த, விடுமுறை ரத்து செய்யப்பட்டுள்ளது என தொழிலாளர் ஆணையர் திரு. கா. பாலச்சந்திரன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவிக்கிறார்கள்.

வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9